**செ. கு. எண்**:37 **நாள்**:02.02.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

இரங்கல் செய்தி – 2.2.2013

சுதந்திரப் போராட்ட தியாகியும், புதுச்சேரி முன்னாள் முதலமைச்சரும், புதுச்சேரி காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. ப. சண்முகம் அவர்கள் இன்று (2.2.2013) தனது 84–வது வயதில் இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

திரு. சண்முகம் அவர்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு புதுச்சேரி மக்களின் நலன்களுக்காக பாடுபட்டவர். புதுச்சேரி முதலமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் திறம்பட பணியாற்றியவர். திரு. சண்முகம் அவர்கள் அனைத்து கட்சியினரிடமும் விருப்பு, வெறுப்பின்றி அன்புடன் பழகும் பண்புடையவர். திரு. சண்முகம் அவர்களின் மறைவு காங்கிரஸ் கட்சிக்கும், புதுச்சேரி மாநில மக்களுக்கும் பேரிழப்பாகும்.

திரு. சண்முகம் அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், அவரது நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**